பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 08 வியாழக்கிழமை 23.12.2021 கதிர் 48

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழ்ப் பேசும் தரப்புக்களின் தலைவர்களின் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் வெள்ளவத்தை குளோபல் டவர் அரங்கில் நடைபெற்றது.

இந்த வரிசையில் மூன்றாவது கூட்டம் இது. பக்கம்02 »

# அரசியல் தீர்வை வென்றெடுக்க ஓரணியில் பயணிக்கவேண்டும்

## தமிழ்பேசும் கட்சிகளிடம் சம்பந்தன் வலியுறுத்து



தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அனைத்துத் தமிழ்பேசும் கட்சிகளும் ஓரணியில் பயணிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று தமிழ் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்பேசும் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கொள்கைகள் இருக்கக்கூடும். ஆனால், தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அனைத்துத் தமிழ்பேசும் கட்சிகளும் ஓரணியில் பயணிக்க வேண்டும். இது எனது நீண்ட நாள் ஆசை. ☞10

### தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து

# மோடியிடம் முன்வைக்கவுள்ள கடிதத்தின் தலைப்பில் மாற்றம்

### சுமந்திரன் எம்.பி. விசேட அறிக்கை



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைப்பதற்காகத் தமிழ்க் கட்சிகள் தமது கோரிக்கையாக தயார் செய்த கடிதத்தின் தலைப்பு '13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கோருதல்' என இருந்த நிலையில், தற்போது 'தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை - இந்திய ஒப்பந்தமும்' என மாற்றப்பட்டுள்ளது. ☞10

# ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக ஷானி அபேசேகர மனு



அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றத்தில் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய செயற்படத் தவறியதன் ☞10

# பொருள்கள் விலைகள் மேலும் அதிகரிக்குமாம்

### அமைச்சர் ஜோன்ஸ்டன் கூறுகின்றார்



பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும். கடினமான விடயமாக இருந்தாலும் அதனைச் செய்தாக வேண்டிய நிலைமையே உள்ளது.

- இவ்வாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- ☞10

# மேலும் 16 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ☞10

# கொழும்பில் விசேட பாதுகாப்பு



கிறிஸ்மஸ் பண்டிகை மற்றும் புதுவருட காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் நடமாடும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ☞10

# பஸ் கட்டணமும் அதிகரிக்குமாம்

### உறுதிப்படுத்தினார் இராஜாங்க அமைச்சர்

எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டணமும் கட்டாயம் அதிகரிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அறிவித்தார்.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதி ☞10

# இரு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

இரண்டு அமைச்சுகளுக்குப் புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் ☞10

# இணுவிலில் மூச்சுத் திணறலால் மூன்றரை மாதக் குழந்தை சாவு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மூச்சுத் திணறல் காரணமாக மூன்றரை மாத ஆண் குழந்தை பரிதமாக உயிரிழந்துள்ளது.

இணுவில் தெற்கைச் சேர்ந்த குணசீலன் யுகன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணிக்கு தாய்ப்பால் குடித்த குழந்தை காலை 6 ☞10



தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

**மார்கழிப் பெருவிழா - 2021**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

**காலம்** - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)

**இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்**

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

21 ஆம் திகதி நடந்தது. இதற்கு முந்தைய இரண்டாவது கூட்டமும் இதே குளோபல் டவரில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

இந்த ஒழுங்கில் முதலாவது கூட்டம் கடந்த 02 ஆம் திகதி யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தக் கூட்டங்களை ஒட்டி நடைபெற்ற சர்ச்சையில் முக்கியமான ஒன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு கூட்ட ஏற்பாட்டாளரான ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இரண்டாவது கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பவில்லை என்பதாகும்.

என் சொந்த விசாரணைகளின் படி இந்த சர்ச்சைகளின் அடிப்படை, அப்பட்டமான புனைகதையில் - பொய்யில் - வனையப்பட்டதாகும்.

தமக்கு அழைப்புக் கிட்டியதா, கிட்டவில்லையா என்பதை தமது மகனின் திருமண நிகழ்வுகளுக்கு இடையில் அம்சடக்காக மாவை சேனாதிராசா பதிலளிக்காமல் ஒளித்தமையால் வந்த சர்ச்சைதான் இது. அதனை உரிய சமயத்தில் மறுத்து, உண்மையைத் தெளிவுபடுத்தும் அரசியல் நேர்மைத்தனம் மாவை சேனாதிராசாவிடம் இல்லாதமைதான் இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் காரணம்.

கடந்த இரண்டாம் திகதி யாழ். திண்ணையில் நடைபெற்ற கூட்டத்துக்கு தமிழரசுத் தலைவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் தமிழரசு அரசியல் குழுவில் கடுமையாகத் தெரிவிக்கப்பட்ட அதிருப்திக் கருத்துக்கள் காரணமாக அவர் திண்ணைக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. அந்தக் கூட்டத்தை ஒட்டிய அழைப்பு விடயத்தில் சர்ச்சை ஏதுமிருக்கவில்லை.

12ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டத்துக்கு மாவையருக்கு அழைப்பு அனுப்பப்பட்டதா என்பதுதான் சர்ச்சைக்குரிய விடயம். அது பற்றிய விவகாரத்துக்குள் புக முன்னர் அத்தினங்களில் நடந்த நிகழ்வுகளை வாசகர்களுக்கு ஒரு தடவை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த 9 ஆம் திகதி யாழில் மாவையின் மகனின் திருமணம். 10 ஆம் திகதி மாலை கொழும்பில் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு. அடுத்த நாள் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராசாவின் மகனின் திருமண வரவேற்பு நிகழ்வு. அதற்கு அடுத்த நாள் கொழும்பில் தமிழ்த் தரப்புக்களின் தலைவர்களின் இரண்டாவது சுற்றுக் கூட்டம்.

பத்தாம் திகதி நாடாளுமன்ற வாக்கெடுப்பில் கூட்டமைப்பின் எம்.பிக்கள் அனைவரும் பிரசன்னமாகி வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வாக்களிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டமையால் அந்த எம்.பிக்கள் பலரும் 9 ஆம் திகதி திருமணத்தைத் தவிர்த்து, 11 ஆம் திகதி வரவேற்பில் கலந்து கொள்வது என்று தீர்மானித்தனர்.

பன்னிரண்டாம் திகதிய தமிழர் தரப்புகளின் கூட்டம் குறித்து 9 ஆம் திகதி மாலையில் இறுதி முடிவெடுத்த ரெலோவினர், பத்தாம் திகதி தொலைபேசியில் சம்பந்தனைத் தொடர்பு கொண்டனர். ரெலோத் தலைவர் செல்வமே பேசினார். அப்போது சுமந்திரனுக்கு அழைப்பு உண்டா என சம்பந்தன் கேட்க, பணிவாக 'இல்லை, கட்சித் தலைவர்களுக்கு மட்டும்தான் அழைப்பு. தமிழரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளோம்' - என்றார் செல்வம்.

அத்துடன் அவர் நிற்கவில்லை. மாவைக்குத் தாமே தொலைபேசி அழைப்பு எடுத்து, கூட்டம் குறித்துத் தெரிவித்து, அழைப்பும் விடுத்தார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

அதேசமயம், 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சுமந்திரனைச் சந்தித்த சம்பந்தன் 12 ஆம் திகதிக் கூட்டத்துக்குத் தாம் அழைக்கப்பட்டிருக்கின்றார் என்ற விவரத்தை அவருக்குச் சொன்னார். அடுத்த நாள் மாவை வீட்டுத் திருமண வரவேற்புக்குத் தாம் யாழ் செல்ல விருப்பதை சுமந்திரன் குறிப்பிட்டபோது "நல்லது 12 ஆம் திகதி கூட்டத்துக்கு மாவைக்கு அழைப்பு அனுப்பப்பட்டதா என்பதைக் கேட்டு உறுதிப்படுத்துங்கள்" என்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கிடையில் -

10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தம்மை சந்தித்த புளொட் தலைவர் சித்தார்த்தன், தாம் அடுத்த நாள் யாழ். செல்கின்றார் என்று கூறியமையால் அவர் மூலமாகவே மாவைக்குரிய அழைப்பை எழுத்தில் கொடுத்து அனுப்பினார் ரெலோத் தலைவர் செல்வம்.

செல்வத்தைப் பொறுத்த வரை தாமே தொலைபேசி அழைப்பு எடுத்து, மாவை சேனாதிராசாவுக்கு கூட்டம் பற்றித் தெரியப்படுத்தி, அக்கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தமையாலும், எழுத்து மூல அழைப்பை சித்தார்த்தன் மூலம் அனுப்பி வைத்தமையாலும் இவ்விடயத்தின் தம் பணி முடிந்துவிட்டது என்று தீர்மானித்திருக்கலாம். அதில் தப்பு ஏதும் இல்லை.

11ஆம் திகதி மாலையில் மாவை வீட்டுத் திருமண வரவேற்பின் இடையே சுமந்திரனும், சி.வீ.கே.சிவஞானமும் தனித் தனியாக மாவையிடம் அடுத்த நாள் காலையில் கொழும்பில் நடைபெறும் கூட்டம் குறித்துப் பிரஸ்தாபித்த போது தான் மாவையின் நடிப்பு வெளிப்பட்டிருக்கின்றது.

"அப்படியா? அப்படி ஒரு கூட்டம் குறித்து எனக்கு எதுவும் தெரியாதே..?" என்ற தொனியில் மாவை பேச, அதை நம்பி, நாங்கள் எல்லோரும் செய்தியாக்கிவிட்டோம்.

சுமந்திரனும், சம்பந்தன் ஐயாவுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து மாவைக்கு அழைப்பு அனுப்பப்படவில்லைஎன்றதகவலைத்தெரியப்படுத்தினார்.

இதற்கிடையில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியிலிருந்து சுமந்திரன் புறப்பட்ட போது சித்தார்த்தன் அங்கு வந்திறங்கினார்.

உடனே மாவையிடம் சென்ற சித்தார்த்தன் பகல் முழுவதும் கொழும்பிலிருந்து வாகனத்தில் பயணித்து சற்று முன்தான் தாம் யாழ் வந்து சேர்ந்தார் என்றும், வந்த அயர்ச்சியில் அழைப்பிதழ் கடிதத்தை கையோடு எடுத்துவர மறந்துவிட்டார் என்றும், காலையில் அதை அனுப்பி வைப்பார் என்றும் கூறியிருக்கின்றார்.

"இப்போதுதான் யாழ் வந்து சேர்ந்துள்ளேன். நாளை காலை கொழும்புக் கூட்டத்துக்காகத் திரும்பி கொழும்பு செல்ல முடியாது. அதனால் நான் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டேன். என் பிரதிநிதியாக ஆர்.ஆர். பங்குபற்றுவார். உங்கள் வீட்டிலிலும் திருமணத் திருவிழா முடிய நள்ளிரவாகும் போல உள்ளது. இதற்குப் பின்னர் நீங்கள் கொழும்பு பயணித்து கூட்டத்தில் பங்குபற்றுவது சாத்தியமா?" என்று சித்தார்த்தன் கேட்டிருக்கின்றார்.

"ஆமாம் சாத்தியமில்லை. நானும் போகமாட்டேன்" என்று மாவை கூறியிருக்கின்றார்.

அடுத்தநாள் காலையில் நேரத்துடன் அழைப்புக் கடிதத்தை தனது உதவியாளர் ஒருவர் மூலம் மாவை வீட்டில் சேர்ப்பித்தார் சித்தார்த்தன்.

இவ்வளவும் நடந்து, தமிழரசுத் தலைவருக்குக் கூட்டத்துக்கு அழைப்பு இல்லை என்ற செய்தி பரபரப்பாகப் பரவ, இன்று வரை அதை மறுத்து உண்மையைத் தெளிவுபடுத்தாமல் நாசூக்காக மௌனம் சாதித்து அரசியல் குழப்பம் பண்ணுகின்றார் மாவை.

அடுத்த நாள் 12 ஆம் திகதி காலையில் கூட்டத்துக்கு போய் இறங்கிய சம்பந்தனை முன்முகப்பிலேயே நின்று வரவேற்றார் கூட்ட ஏற்பாட்டாளர் செல்வம். சம்பந்தன் ஐயாவின் கைகளைப் பரிவோடு பற்றி அவரை கைத்தாங்கலாக அழைத்து வந்த செல்வத்திடம் சம்பந்தன் ஐயா உரிமையோடு ஒரேஒரு கேள்வி கேட்டார்.

"ஏன் செல்வம், மாவைக்கு அழைப்பு அனுப்பவில்லை?" என்றார் ஐயா.

"இல்லை ஐயா. உங்களுக்குத் தொலைபேசியில் அழைப்புத் தந்த கையோட மாவை அண்ணனுக்கும் விளக்கமாக - தெளிவாக - சொன்னேன். எழுத்திலும் சித்தார்த்தன் மூலம் அனுப்பினோம்" என்று உறுதியாகச் சென்னார் செல்வம். சம்பந்தன் ஐயா மலைத்துப் போனார்.

2ஆம் திகதி யாழ். திண்ணையில் நடந்த கூட்டத்தில் மாவை பங்குபற்றாதமையால் கோபத்தில் அடுத்த கூட்டத்துக்கு அவருக்கு ரெலோ அழைப்பு அனுப்பவில்லையோ என்ற சந்தேகத்தில் இருந்தவர்களுக்கு இவ்விடயத்தில் உண்மையைத் தெளிவுபடுத்தாமல் ஒளித்து விளையாடிய மாவையின் போக்கு, அவர்களின் சந்தேகத்தை உறுதிப்படுத்திப் பேச வைத்து விட்டது.

இன்று வரை எல்லோரும் - தமிழரசுக் கட்சியினரும் கூட - 12 ஆம் திகதிக் கூட்டத்துக்கு மாவைக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்றே நம்பிக் கொண்டிருக்கின்றனர். அது முழுத் தப்பு. அழைப்பு வழங்கப்பட்டது. மாவை உதாசீனமாக நடந்து - நடித்து - அதனை மறைத்துவிட்டார்.

கடந்த 20 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் அலசப்பட்டது. பங்குபற்றிய எல்லோரும் - சம்பந்தன் உட்பட - இது பற்றிக் கேட்ட போது மாவை முதலில் தெளிவாகப் பதில் சொல்லவில்லை.

'வட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் துட்டுக்கு இரண்டு பாக்கு' என்ற மாதிரியே அவர் பதில் இருந்ததாம்.

"எழுத்திலும் கூட அழைப்புக் கிடைக்கவில்லையா? சித்தார்த்தன் மூலம் அனுப்பியதாக ரெலோ சொல்கின்றதே...?" என்றும் கேட்கப்பட்டது.

"ஓ! அது அடுத்தநாள் கிடைத்தது" என்று ஒரு கட்டத்தில் மாவை பதில் கூறினாராம். ஆனால் அந்த 'அடுத்த நாள்' என்பது எது என்பதை மாவை தெளிவுபடுத்தவேயில்லை.

அந்த அரசியல் குழுக் கூட்டத்தில் சம்பந்தன் இரண்டு, மூன்று தடவைகள் மாவையைப் பார்த்துத் திரும்பத் திரும்ப ஒரே விடயத்தைக் கூறினார்.

"மாவை நாளைய (21ஆம் திகதிய) கூட்டத்தில் தமிழர்களின் பொதுவான நிலைப்பாடுகளைத்தான் நான் கூறுவேன். (10 ஆம் பக்கம் பார்க்க)






## விவசாயி மனத்தில் மகிழ்ச்சி வந்தால் விவசாய தினமே வெளிச்சமாகும்!

(இன்றைய விவசாய தினத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகின்றது.)

ஏர்முனை என்பது கூர்முனையாகும்
இயங்கிடும் உலகின் அருந்துணையாகும்
வாழ்வினை இயக்கும் வரமாயிருந்து
மலர்ந்திடும் துறையே ஏர்முனையாகும்

சேற்றிலே காலை வைத்திடாவிட்டால்
சோற்றிலே கையை வைத்திடமாட்டோம்
நாட்டினை வளமாய் ஆக்கிடவைக்கும்
ஏர்முனை யென்றும் கூர்முனையாகும்

விளைநிலம் என்பது வரமதுவாகும்
விளைபொருள்அதனின்விளைவதுவாகும்
தளர்விலா உலகு தானதுவிருக்க
விளைநிலம் என்பது வரமதுவாகும்

விவசாயி என்றும் முதுகெலும்பாவான்
முதுகெலும்புடைந்தால் மூச்சுமேநிற்கும்
முதுகெலும்புடைய செய்திடுபாங்கில்
அதிகார மெழுதல் அறமுடையல்ல

இயற்கையின் சீற்றம் ஒருபுறந்தாக்க
இயந்திரம் மயத்தால் இயல்புகழுபிய
செயற்கையின் வரவு திசையினைமாற்ற
திகைக்கிறான் விவசாயி செய்வதறியா

விவசாயம் இப்போ விஞ்ஞானமாச்சு
விவசாயி நிலையோ விரக்தியாயாச்சு
பயிர் நிலமெல்லாம் பலவிதவுரங்கள்
இயற்கையோ பார்த்து ஏங்குதலாச்சு

சங்கங்கள் வருகுது சங்கடமாகுது
சரியான தீர்வோ விவசாயிக்கில்லை
விவசாயி நிலத்தை தொட்டுமேபார்த்து
வேதனை விளிம்பில் நிற்கிறானிப்போ

விவசாயம் நாட்டின் முதுகெலும்பாகும்
விவசாயி வாழ்வின் பெருவரமாவான்
விவசாயி அழுதால் தாங்காவுலகு
விவசாயி மகிழ்ந்தால் உலகதுமலரும்

விளைநில மெல்லாம் குடிமனையாகுது
விளைநில மூடாய் வீதியும்வருகுது
விளைநிலமீது மின்கம்பம் அமைக்கிறார்
விவசாயி பேச்சோ காத்திலேபோகுது

விவசாயபட்டம் பெறுகிறார் பலபேர்
விவசாயி நட்டம் அறிகிலாரவரோ
உயர்பீடமாக விவசாயம் இருக்க
உழல்கிறான் விவசாயி உயர்பீடமுணரா

ஔவையுரைத்தார் வள்ளுவர் உரைத்தார்
எங்கள்பாரதி இடித்துமே உரைத்தார்
பண்டையிலக்கியம் பகர்ந்தது பலதை
படித்துமே யாவருமே உணர்கிறாரில்லை

உண்டி கொடுக்கும் விவசாயி
உலகின் பெருவளம் ஆகின்றான்
உணவைக் கொடுக்கும் விவசாயி
உயிரை மாய்த்து மடிகின்றான்

விவசாய தினத்தை நினைக்கின்றோம்
விரிவாய் விரிவுரை ஆற்றுகிறோம்
விவசாயி மனநிலை உணராமல்
விழாவினை எடுப்பது முறையாமோ

வேதனை துடைக்க வழிசமைப்போம்
விவசாயி வாழ்வில் ஒளிகொடுப்போம்
விவசாயி மனத்தில் மகிழ்ச்சிவந்தால்
விவசாய தினமே வெளிச்சமாகும்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)**

# ஒரு லீற்றர் பெற்றோலில் 69 ரூபா அரசுக்கு இலாபமாக கிடைக்கும்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைவடைந்து செல்லும் நிலையில் இலங்கையில் விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் எரிபொருள்களைசேமித்துக்கொள்வதற்கு மக்களுக்கு தண்டனையாக எரிபொருள்களின் விலையை அதிகரித்திருப்பது வரலாற்றில் முதல் தடவையாகும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பொரலஸ்கமுவ பெபிலியான பிரதேசத்தில் நடத்திய சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைந்து செல்லும்நிலையில்அரசாங்கம்எரிபொருள்களின்விலையை அதிகரித்திருக்கின்றது. மேற்குலகில் பரவிவரும் கொவிட் தொற்று மற்றும் ஐக்கிய நாடுகள், சீனா மற்றும் இந்தியா தங்களது எண்ணெய் தொகையில் இருந்து ஒரு பகுதியை வர்த்தக சந்தைக்கு விட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

2021 டிசெம்பர் மாதம் 92 வகை பெற்றோல் பெரல் ஒன்று 85 டொலருக்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் ஒரு டொலரின் உத்தியோகபூர்வ பெறுமதியான 203 என்ற அடிப்படையில் ஒரு பெரல் சுமார் 17 ஆயிரத்து 255 ரூபாவாகும். அதன் பிரகாரம் சாதாரணமாக பெற்றோல் ஒரு லீற்றர் 108 ரூபாவாகும். அதன் பிரகாரம் 92 வகை பெற்றோல் ஒரு லீற்றர் மூலம் 69 ரூபா இலாபம் பெறப்படுகின்றது. அதேபோன்று 95 வகை பெற்றோல் லீற்றர் ஒன்றின் மூலம் 99 ரூபா இலாபம் கிடைக்கின்றது.

மேலும் போக்குவரத்துச் செலவு, கூட்டுத்தாபனத்தின் செலவு விற்பனையாளர்களின் செலவுகள் அனைத்தையும் லீற்றருக்கு 10 ரூபா என எடுத்துக்கொண்டால் 92 வகை பெற்றோல் ஒரு லீற்றர் மூலம் 59 ரூபா இலாபம் பெறப்படுகின்றது. அதேபோன்று 95 வகை பெற்றோல் லீற்றர் ஒன்றின் மூலம் 89 ரூபா இலாபம் கிடைக்கின்றது.

அதேபோன்று இரண்டுவகை டீசல் எண்ணெய்களையும் 85 டொலர்களுக்கே டிசெம்பர் மாதம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அப்படியாயின் இரண்டுவகை டீசல்கள் மூலம் முறையே 26 ரூபா மற்றும் 41 ரூபா என்ற அடிப்படையில் இலாபம் இருக்கின்றது.

அத்துடன் எரிபொருள்களின் விலை அதிகரிக்க முடியுமாக இருப்பது நிதி அமைச்சரின் அனுமதியுடன் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்காகும். ஆனால் எரிபொருள்களின் தேவையை குறைத்துக்கொள்வதற்காக எரிபொருள்களின் விலை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய வங்கியின் ஆளுநரே முன்வைத்தார். அதன் பிரகாரம் விலை அதிகரிப்பைக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டது. அதனால் வலுசக்தி அமைச்சால் பொதுஜன பெரமுன, பெற்றோலிய கூட்டுத்தாபனம் உட்பட நிறுவனங்களுக்கு பாரிய குற்றச்சாட்டுக்களை தெரிவித்து, விலை அதிகரிப்பை மூடிமறைக்கும் ஊடக சந்திப்பொன்று எதிர்வரும் தினங்களில் இடம்பெறும்.

இலங்கையில் பாரிய முதலீடாக 600 பில்லியனுக்கு புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பாகவும் மன்னார் குடாவில் எண்ணெய் ஆய்வின் மூலம் 47 டொலர் பில்லியன் கடன் செலுத்துவது தொடர்பாகவும் கற்பனைக் கதைகளைச் சொன்னாலும் எரிபொருள்களை சேமித்துக் கொள்வதற்கு மக்களுக்கு தண்டனையாக எரிபொருள்களின் விலை அதிகரித்திருப்பது வரலாற்றில் முதல் தடவையாகும். - என்றார்.

# ரூபாவின் விலையை அதிகரிப்பதால் டொலர் கையிருப்பு எவ்வாறு எகிறும்?

## பிமல் ரத்னாயக்க கேள்வி

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள சந்தர்ப்பத்திலேயே இலங்கையில் விலை உயர்வடைந்துள்ளது. உள்நாட்டில் எரிபொருள் விலையை ரூபாவால் உயர்த்துவதன் மூலம் எவ்வாறு டொலர் கையிருப்பை அதிகரிக்க முடியும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க கேள்வியெழுப்பினார்.

பத்தரமுல்லையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

2013 ஆம் ஆண்டு உலக சந்தையில் எரிபொருள் விலை பாரியளவில் உயர்வடைந்திருந்தது. எனினும் இலங்கையில் விலை உயர்த்தப்படவில்லை. ஆனால், தற்போது உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையிலேயே இலங்கையில் விலை உயர்வடைந்துள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டிலிருக்கும் போது இதனை அறிவிக்காமல் தற்போது அவர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் அறிவிக்குமாறு குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சின் கோரிக்கைக்கு அமையவே பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்திருந்த போது கூட இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை.

எரிபொருள் விலை அதிகரிப்பின் பிரதிபலனாக பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன. ஓட்டோ உள்ளிட்ட போக்குவரத்து கட்டணங்களும் அதிகரிக்கப்படும்.

இதேபோன்று மேலும் பலவற்றின் விலைகளும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் மூலம் அரசாங்கமும் மக்களும் நஷ்டமடைந்தாலும், அரசியல்வாதிகளும் வர்த்தகர்களும் இலாபமடைகின்றனர்.

தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பு நியாயமற்றதாகும். இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் இதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது. இந்த நடவடிக்கைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். - என்றார்.


# பருத்தித்துறை நகரசபை பகிரங்க ஏலம்

01.01.2022 ஆந் திகதி தொடக்கம் 31.12.2022 ஆந் திகதி வரையான காலப் பகுதிக்கு பருத்தித்துறை நகரசபையின் ஆட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்கு நடாத்துவதற்கான பகிரங்க ஏலம் 29.12.2021 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் நடைபெறும். ஏலக் கேள்வியில் கலந்து கொள்வோர் அன்றைய தினம் மு.ப.10.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யப்படாத வைப்புப்பணமாக ஆயிரம் ரூபாவினை (ரூபா.1000.00) செலுத்தி ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.

**23.12.2021**
**திரு.யோ.இருதயராசா**
**தவிசாளர்**
**பருத்தித்துறை நகரசபை.**


## களுத்துறை கடற்கரையில் அவசரமாக தரையிறங்கியது இலகு ரக விமானம்

தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான இலகுரக பயிற்சி விமானம் ஒன்று நேற்று (புதன்கிழமை) களுத்துறை, பயாகல கடற்கரையில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இந்த விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து இயங்கும் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமானது என இலங்கை விமானப்படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேற்படி விமானத்தின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தின் போது ஒரு பயிற்றுவிப்பாளர் (விமானி) மற்றும் பயிற்சி மாணவர் ஒருவரும் விமானத்தில் இருந்துள்ளனர்.

விமானம் தரையிறங்கியதும் தகவல் அறிந்த விமானப் படையின் மீட்புக் குழு சம்பவ இடத்துக்கு விரைந்தமையுடன், இதனால் எவரும் காயமடை யவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியது.

இதனிடையே இலகுரக பயிற்சி விமானத்துக்குச் சொந்தமான தனியார் நிறுவனத்தின் தொழிநுட்பக்குழுவொன்று மேற்படி இடத்துக்கு வந்து விமானத்தை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குழப்பக் குடியரசு இது!

**பிரிட்டனின் கொலனித்துவ ஆட்சி முறையில் இருந்து 1972 இல் தன்னை விடுவித்துக் கொண்டு, சுயாதீனமான, இறைமையுள்ள, சுதந்திர குடியரசாக 1972 இல் மாறிய இலங்கைத் தீவு, 1978 இல் ஜனநாயக சோசலிஷக் குடியரசாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது.**

**இப்போது சுமார் ஐம்பது ஆண்டுகளின் பின்னர் 'குழப்பக் குடியரசு' என்ற மோச நிலைமையை அது எட்டியிருக்கின்றது.**

**அந்தச் சீர்கெட்ட நிலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டு வருட ஆட்சி மிக வேகமாக எட்ட வைத்திருக்கின்றது என்பதுதான் நிலைமை.**

**இந்த இழிநிலை ஏற்பட்டதற்குப் பிரதான காரணம் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்கும், அந்த மேலாண்மைத் திமிரில் கட்டவிழ்ந்த ஆட்சி முறைமையும்தான்.**

**பௌத்த, சிங்கள இனவெறியூட்டப்பட்ட தீவின் பெரும்பான்மை இன மக்கள், நாட்டுக்குச் சிறந்த பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தக்கூடிய ஆட்சியாளர்களை தேடவில்லை. நீதி, நியாயமான நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றும் அதிகார வர்க்கத்தைத் தேடவில்லை.**

**மாறாக, பௌத்த, சிங்களப் பேரினவாத முகமூடி அணிந்த இனவாதிகளையே தேடித் தேடி நாட்டின் அரசியல், நிர்வாக அதிகாரங்களை ஒப்படைத்தனர்; ஒப்படைக்கின்றனர்.**

**ஒருபுறம் பேரினவாதம் பேசி, நாட்டையும் மக்களையும் ஒன்றுபடவிடாமல் துண்டாடி நின்ற அந்த இனவாதிகளினால், ஒட்டுமொத்த நாட்டுக்கும் நலன் தரும் அரசியல், பொருளாதார, சமூகத் திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை; முன்னெடுக்க அவர்கள் விரும்பவுமில்லை. அவர்களுக்கு அது இயலவுமில்லை.**

**மாறாக, மறுபுறம் பேரினவாதத்தின் பெயரால் தாங்கள் கைப்பற்றிய அதிகாரம் மூலம் தங்கள் எதேச்சதிகார ஆட்சியை நிலை நிறுத்துவதிலும், அதிகாரத்தை உறுதிப்படுத்துவதிலுமே அவர்கள் குறியாக இருந்தனர். அதனால் நாடு குட்டிச்சுவரானதே மிச்சம்.**

**இந்தப் பேரினவாதப் போக்கினால் மக்கள் பிரதிநிதித்துவ சபை என்ற நாடாளுமன்றத்தின் மாண்பும், அடியோடு அடிபட்டுக் கெட்டுச் சீரழிந்துவிட்டது. சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கும் சீரழிவுச் சட்டங்களை யாக்கும் கொடுங்கோண்மை மன்றாகவே அது மாறிவிட்டது.**

**சிறுபான்மையினரின் குடியுரிமைகளைப் பறிக்கும் குடியுரிமைச் சட்டம், சிங்களத்தை மட்டும் அரசமொழியாக்கும் தனிச் சிங்களச் சட்டம், மாணவர் உயர் கல்வி வாய்ப்பில் இனவாதத்தைப் புகுத்தி, சிறுபான்மையினரை ஓரங்கட்டிய தரப்படுத்தலுக்கான சட்டங்கள், கேட்டுக் கேள்வியின்றி சிறுபான்மையினரை சிறையில் அடைத்து, சித்திரவதை செய்து, அதனடிப்படையில் பெறப்படும் பலவந்த ஒப்புதல்வாக்குமூலம் வாயிலாக பல டசின் ஆண்டுகள் சிறுபான்மையினரை சிறையில் அடைக்கவும், விசாரணைகளின்றியே வாழ்நாள் முழுவதும் தடுப்புக்காவலில் வைக்கவும் வழி செய்யும் பயங்கரவாதச் சட்டம் போன்ற கொடூர – குரூர – சட்டங்களை நிறைவேற்றும் அநியாய மன்றமாக நாடாளுமன்றம் மாறிவிட்டது.**

**ஒருபுறம் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் கேவலம் கெட்ட நிலையில் இருப்பது குறித்து ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் சர்வதேசங்களும் கடும் எச்சரிக்கை விடும் நிலைமை.**

**மறுபுறம் பொருளாதார ரீதியில் நாட்டின் வலிமை சீரழிந்து, கடனிறுக்க வழியில்லாத நாடு என்ற நாமத்தை விரைவில் தானே தேடிச் சூடிக் கொள்ளும் தீவிரப் போக்கில்தான் நாட்டை அதன் தற்போதைய ஆட்சியாளர்கள் வழிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.**

**அப்படி ஒரு மோச நிலைமை விரைவில் ஏற்படும் போது மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவற்றுக்காக சர்வதேச மட்டத்தில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கை ஆட்சியாளர்களைக் காப்பாற்றி வரும் – ஆட்சியாளர்களின் நேச நாடுகளுக்கும் கூட – உரிய கடன் தவணைக் கட்டணங்களை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்படும். அப்போதும் சர்வதேச ரீதியில் மனித உரிமை மீறல் கொடூரக் குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் இலங்கை ஆட்சியாளர்கள் நிறுத்தப்படுவதை அவர்களின் அந்த நேச நாடுகள் ஆட்சேபித்துத் தடுத்து, அவர்களைப் பாதுகாக்குமா என்பது கேள்விக்குறியே.**

## டெங்குத் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் கட்டுப்படுத்த வவுனியாவில் விசேட ஏற்பாடு





டெங்குத் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வவுனியாவில் டெங்கு நோயை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தவசிகுளம் கிராமத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பகுதி மக்களின் பங்களிப்புடன் குழு ஒன்று உருவாக்கப்பட்டதுடன், அந்தக் குழுவினர், சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் ஆகியோர் இணைந்து டெங்கு பெருக்கும் இடங்களை அழிப்பதற்கான விசேட சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் தமது வதிவிடங்களை வைத்திருந்தவர்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், எதிர்வரும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவசிகுளத்தின் அனைத்து வீடுகளிலும் டெங்கு நுளம்புகள் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தலவத்துகொட பிரதேசத்தில் திடீர் சோதனை நடவடிக்கை



தலங்கம பொலிஸின் ஊழல் ஒழிப்பு பிரிவினர் தலவத்துகொட பிரதேசத்தில் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, 5 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான 2 கிலோகிராம் 100 கிராம் கேரள கஞ்சா மற்றும் 10 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து இலத்திரனியல் தராசு மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் தலவத்துகொட உத்துவான்கந்தவைச் சேர்ந்த படா என அழைக்கப்படும் அருண மற்றும் பத்தரமுல்லவைச் சேர்ந்த ஹைஸ்பீட் என அழைக்கப்படும் பிரசன்ன என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கடுவெல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## யாழ்.பல்கலை பணியாளர்களுக்கு மூன்றாவது கொரோனாத் தடுப்பூசி





வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில், நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கான மூன்றாவது கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

கடந்த ஜூன் மாதம் 02 ஆம், 03 ஆம் திகதிகளில் முதலாவது சினோபோர்ம் தடுப்பூசியையும், ஜூலை மாதம் 07 ஆம் திகதி இரண்டாவது சினோபோர்ம் தடுப்பூசியையும் பெற்றுக்கொண்ட பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைஸர் - பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

## கொவிட் குணமடைவு 331 ஆல் அதிகரித்தது

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 311 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 58 ஆயிரத்து 226 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 80 ஆயிரத்து 922 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 795 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு மாதங்களுக்கு பால்மாவுக்கு தட்டுப்பாடு

இறக்குமதி பால் மாவை ஏற்றி வரும் கப்பல்களின் தாமதம் மற்றும் களஞ்சிய கட்டணங்கள் அதிகரிப்பு காரணமாக பால் மா தட்டுப்பாடு இன்னும் இரண்டு மாதங்களுக்கு தொடரக்கூடும் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவை கொள்வனவு செய்வதற்கு டொலர்கள் இல்லாததால் வங்கிகள் ஊடாக கடன் கடிதங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கான தட்டுப்பாடு காரணமாக நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றமையைத் தடுக்க உள்நாட்டு பால் மா நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பால் மா இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசுடன் இணைந்துள்ள எம்.பிக்கள் அபிவிருத்தி திட்டங்களை தடுக்கின்றனர்

## சாணக்கியன் குற்றச்சாட்டு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக ஏதாவது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது அரசாங்கத்துடன் இணைந்து இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதுவொரு பிரச்சினையாக இருப்பதன் காரணமாக அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க விடாமல் அவர்கள் தடுக்கின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலமீன்மடு பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் பாலமீன்மடு, முகத்துவாரம் லைட்ஹவுஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

லைட்ஹவுஸ் விளையாட்டுக் கழக செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இதனை வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் ஐ.சிறிதரன், தமிழரசுக்கட்சியின் வாலிபமுன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தீபாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட இரா. சாணக்கியன் –

நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலின்போது எதிர்பார்க்கவில்லை இந்த மொட்டு அரசாங்கம் கிட்டத்தட்ட மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் என்று.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு 20 ஆசனங்கள் கிடைக்கும், நாங்கள் தீர்மானிக்கும் சக்தியாககூட இருக்கலாம் என்ற நம்பிக்கையுடனே நாங்கள் அந்த தேர்தலில் போட்டியிட்டோம். நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் அரச தரப்பிலும் இருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் உள்ள நிலையில் அதுவே இந்த மாவட்டத்தின் துரதிர்ஷ்டவசமாக மாறியுள்ளது. இன்று மட்டக்களப்பு மாவட்டத்திலே இந்த மாவட்டத்தில் உள்ள அரசாங்க அதிபரே முதலாவது அரசியல் கைதியாகவுள்ளார். சிறையில் அரசியல் கைதியைவிடவும் அவர் ஓர் அரசியல் கைதியாகவுள்ளார்.

நாங்கள் சிலவேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்மொழிவுகளைக்கேட்டால்அது அரசாங்கத்துடன் உள்ள ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு பிரச்சினையாகவுள்ளது. அவ்வாறு வழங்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களை பேசவேண்டும். அரசியல்தீர்வுக்கான ஆதரவை நாங்கள் இளைஞர்கள் மத்தியில் அதிகரிக்க வேண்டும். தேசிய ரீதியான பொறிமுறையொன்றை நாங்கள்மாகாணசபை ஊடாக உருவாக்கமுடியும்.

இன்று தீர்மானங்கள் கொழும்பிலிருந்தே எடுக்கப்படுகின்றன. எங்களது கைகளில் அதிகாரம் இருக்குமானால் நாங்கள் எதனையும் செய்யமுடியும். இன்று கிழக்கு மாகாணசபைக்கு மத்திய அரசாங்கத்தால் 10 லட்சம் ரூபா நிதி மட்டுமே வழங்கப்படுகின்றது. இதனை வைத்து எதனையும் செய்யமுடியாது.

எனக்கு தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகவிருக்கவேண்டும் என்று ஆசையில்லை. நான் எனது வயதில் நாடாளுமன்ற உறுப்பினராகவிருப்பதன் காரணமாக பல இழப்புகளை எதிர்கொண்டுள்ளேன்.

ஒரு படம் பார்க்கமுடியாது, நண்பர்களுடன் சுற்றுலா செல்லமுடியாது. அவ்வாறு தெற்கு பக்கம் சென்றால் படம் எடுப்பதிலேயே எனது நேரம் செலவாகிறது. சர்வதேசம் மூலமே எமக்கான தீர்வுக்கான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்க முடியும். அதற்கான ஆதரவுத் தளம் இளைஞர் மத்தியில் இருக்கவேண்டும். அபிவிருத்தி என்பது மழைக்காலத்தில் ஆட்டுக்குட்டி போடுவதும் கொங்கிறீட் ரோட் போடுவது மட்டுமல்ல.

தமிழ் இளைஞர்கள் எதிர்காலத்தில் ஒன்றுபட்டு செயற்படாவிட்டால் இன்னும் 20 வருடத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் இல்லாமல்போகும் நிலையே ஏற்படும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 2008 தொடக்கம் 2012ஆம் ஆண்டுவரையிலிருந்தது தமிழ் முதலமைச்சர், 2012 தொடக்கம் 2017வரையிலிருந்தது முஸ்லிம் முதலமைச்சர், இன்று அரசாங்கத்தின் திட்டம் கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் வாழும் என்ற அடிப்படையில் எந்த சமூகத்திலிருந்து முதலமைச்சர் வரவில்லையோ அந்த சமூகத்திலிருந்து முதலமைச்சர் வரவேண்டும் என்ற இலக்குடனேயே செயற்பட்டு வருகின்றது.– எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வல்லைவெளியை அழகுபடுத்தும் செயற்றிட்டம் ஆரம்பித்து வைப்பு

‘செழுமையான நாட்டை கட்டியெழுப்பும் நோக்கு’ எனும் அரசாங்கத்தின் தொனிப்பொருளுக்கமைய பசுமை உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வல்லைவெளியை அழகுபடுத்தும் செயற்றிட்டம், நேற்று (புதன்கிழமை) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்றிட்டங்களுக்கான முன்மொழிவுகளை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முன்வைத்திருந்தார்.

வடமராட்சியின் நுழைவாயில்களில் பிரதானமாகத் திகழும் வல்லைவெளி, இயற்கை அழகும், இறை நம்பிக்கையும் நிறைந்த பிரதேசமாகும்.

நீண்ட பயணங்களின்போதான காவல்தெய்வ வழிபாட்டிடங்களைக் கொண்டுள்ள வல்லைவெளி, வருடம் முழுவதும் சூரிய உதயத்தையும், அஸ்தமனத்தையும் ரசிப்பதற்கும், நீண்ட நடைப்பயிற்சிகளை செய்யவும், இளைப்பாறுவதற்கான சூழலையும் கொண்டமைந்துள்ளது.

யாழின் சுற்றுலா மையங்களில் ஒன்றாக மிளிர்வதற்குரிய இடம்சார், சூழலியல்சார் தகுதிகளைக் கொண்டுள்ள வல்லைவெளி, பறவைகளை ரசிப்பதற்கும் பொருத்தமான பிரதேசமாகும்.

இத்தகைய இயற்கை அழகை கொண்ட வல்லைவெளியை அழகுபடுத்து வதானது வடமராட்சிக்குரிய மற்றுமோர் அபிவிருத்தியாக அமையும்எனும் நோக்கில், நகர அபிவிருத்தி அதிகார சபையால் 6.4 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதன்படி, வல்லைவெளிப்பகுதியில், வரவேற்பு வளைவு, நடைபாதை, இளைப்பாறும் பகுதிகள், வாகன தரிப்பிடங்கள், இயற்கை ரசனை மையங்கள், சிற்றுண்டி மையங்கள், கழிப்பறை வசதிகள், வல்லைச்சந்தி மேம்படுத்தல் என்பன இந்தத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளமை





# பாதுகாப்புத் தரப்பு என அடையாளப்படுத்தி சிலர் மீனவர் மீது காட்டுமிராண்டி தாக்குதல்

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் சிவில் உடையில் வந்த நபர்கள் தங்களைப் பாதுகாப்புத் தரப்பினர் என அடையாளப்படுத்தி மீனவர் மீது மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

தாக்குதலுக்குள்ளான மீனவர் கடற்றொழிலுக்கு சென்றவேளை கடலில் இந்திய இழுவைப் படகுகளால் 17 வலைகளை இழந்திருக்கின்றார்.

அவற்றைத் தேடியும் கிடைக்காத நிலையில் சில மணிநேரம் காலதாமதமாக பிற்பகல் 2.45 மணியளவில் கரைக்குத் திரும்பியிருக்கின்றார்.

கரைக்கு திரும்பியவர் வீட்டுக்கு சென்றிருந்த நிலையில் அவருடைய வீட்டுக்கு சென்ற சிலர் தங்களை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் என அடையாளப்படுத்தி விசாரணை செய்துவிட்டு சென்றிருக்கின்றனர். மீண்டும் விசாரணைக்கு வருமாறு குறித்த மீனவர் அழைக்கப்பட்டுள்ளார். இதன்போது வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு கை கால்கள் கட்டப்பட்டு சரமாரியாக தாக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கட்டைக்காடு முள்ளியானைச் சேர்ந்த 34 வயதுடைய ஞானப்பிரகாசம் ராஜ்குமார் என்ற 3 பிள்ளைகளின் தந்தையே காயமடைந்துள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான மீனவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# குக்கிராமங்களிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக்கூடிய வகையில் அதிகாரிகள் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்

## பிள்ளையான் அறிவுறுத்து

அதிகாரிகள் குக்கிராமங்களிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக்கூடிய வகையில் திட்டங்களை தயாரிக்கவேண்டும் என மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்தினூடு திட்டம் ஊடாக கிராமிய பொருளாதாரத்தின் ஊடாக ‘உணவுப்பாதுகாப்பு’ என்னும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அதிகாரிகளை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்கிழமை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வரவு – செலவுத் திட்டம் ஊடாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 48 கிராம சேவையாளர் பிரிவுகள் ஊடாக வரவு – செலவுத் திட்டம் ஊடாக கிராம மட்ட உற்பத்தி செயற்றிட்டங்கள் ஆரம்பிப்பது தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.

மட்டக்களப்பில் குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்கள் மற்றும் விசேட தேவையுடையவர்கள் விசேட கவனம் லுத்தப்பட்டு இந்த கிராமிய உற்பத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன், ‘நாடு தற்போதுள்ள சூழ்நிலையில் கிராமிய பொருளாதாரத்தை உயர்த்தி பஞ்சம் பட்டினியில்லாமல் போசாக்கான சமூகத்தை கட்டியெழுப்பவேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு உள்ளது. அந்த அடிப்படையிலேயே இந்த வரவு – செலவுத் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. – எனக் குறிப்பிட்டார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 229**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**593. கூட்டமைப்பின் நேற்று முன் தினக் கொழும்புக் கூட்டத்தில் ஒன்றுபட்ட தரப்புக்களாக ஆவணம் தயாரிக்கப் பூர்வாங்க இணக்கம் தெரிவித்துள்ளார்களே? தமிழர் தகவல் நிலையத்தின் சமர்ப்பணங்களில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எவை?**

இணக்கம் என்பது நன்மையான முன்னேற்றமே. ஆனாலும் ஒரு தரப்பு தயாரித்த மனுவை ஏற்காது, அதில் சிலதான் ஏற்கப்படும் என்றும், இனி ஒரு வரைவு தயாரித்து அது எல்லோரது பார்வைக்கும் வைத்து, அதை ஏற்றபின் அனுப்பப்படலாம் என்ற காலதாமதங்களும் உண்டு. அவை அமெரிக்கத் தரப்புகளின் நிலையை புது வருடத்தில் அறிந்து முன்னெடுப்பதற்கான இழுத்தடிப்பா அல்லது அவர்களின் அழுத்தங்களில் உள்ளக சுயநிர்ணய உரிமைகளில் ராஜபக்ஷக்கள் ஏற்கக் கூடிய தீர்ப்புக்களைத் தராவிட்டால் பின்னர் பார்க்கலாம் என்பதும் தெரியாது. அடிக்கிணறுகளில் எந்த நீர் தேங்கியுள்ளது என அறிவது கஷ்டம் – அரசியல்களால்.

தமிழர் தகவல் நிலையம் சமர்ப்பித்த கடிதத்தின் ஆக்கத்திலும் தயாரிக்கப்பட்ட சமர்ப்பணத்திலும் சுமந்திரன், மாவை, நீதியரசர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம், சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்ற பலரின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டன. இது, தேர்தல் அரசியலுக்காகத் தயாரிக்கப்பட்டதல்ல. தமிழ் மக்களும் ஒரு நிலையான தீர்வுக்கான சாசனமாக, அதன் அணுகுமுறையாக, தயாரிக்கப்பட்டது. அவர்கள் 'கூட்டுறவான சமஷ்டியை நோக்கி' இந்தியாவின் ஆதரவுடன் முன்னேற வேண்டும். இடையில், ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்ட அதிகாரங்களை, ஆளுநர் முறையை மாற்றி, மாகாண சபைகள் அமுல்படுத்தும் முறையில் தமிழ்ப் பிரதேசங்களின் கட்டமைப்புக்கள் மேலும் அழிந்து போகாதவாறு செயற்திறமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



சமர்ப்பணத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்:-

1. 13 ஆம் திருத்தத்தின் கீழ் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெற முடியாத அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக மாகாண சபையின் அதிகாரத்தின் கீழான ஏற்பாடாக நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

2. இலங்கை - இந்திய ஒப்பந்தம், அது ஏற்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக அதனை நிறைவு செய்யும் முகமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

3. வட - கிழக்கு மாகாணங்களில் மக்கள் விகிதாசாரத்துக்குத் தேவையற்று, தமிழ் பிரதேசங்களின் காணிகளை அபகரிக்கும் திட்டங்களுக்கு உதவி செய்யவே இராணுவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த பிரதேசங்கள் இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இவை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நோக்கங்களை இல்லாமல் செய்வதின் ஏற்பாடுகளாகும்.

4. வெளியாருக்குக் காணிகள் விற்கப்படுவதையும் குத்தகைகளுக்குக் கொடுப்பதையும் மட்டுப்படுத்தி, அவற்றை அந்தந்தப் பிரதேசத்தின் மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் திட்டங்களுக்கு மாகாண சபைகளின் வழிகாட்டலில் ஆக்குதல்.

5. தமிழ் மக்களின் தொடர்ந்த பிரச்சினைகளை அவர்களோடு இணைந்து கவனிப்பதற்காக இந்திய அரசாங்கத்தால் அவர்களின் அதிகாரிகளையும் நாட்டிலும் புலம் பெயரில் சிலரையும் உள்ளடக்கிய குழுவொன்றை அமைத்துப் பிரதமர் நரேந்திரமோடி நாடாளுமன்றத்தில் கூறிய பாதைகளில் கூட்டுறவு சமஷ்டியை ஏற்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அடிமட்ட நிரந்தரத் தீர்வாக கூட்டுறவு சமஷ்டியைப் பெற்றுத் தர வேண்டு எனவும், சமஷ்டியின் தன்மையையும், இடைப்பட்ட காலத்தில் உடனடியாக 13 ஆவது திருத்தத்தை அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக, அதிகாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாகாண சபைக்கு பாரப்படுத்தல் வேண்டும். - எனச் சமர்ப்பிக்கப்பட்டது.

**594. தமிழர் தகவல் வட்டம், தயாரித்த சமர்ப்பணத்தின் அடிப்படையில் எல்லா தமிழ்த் தரப்புக்களும் ஒன்றிணைந்து கையளிப்பது சுலபமாகாதா?**

இது கூடுகின்ற கட்சித் தலைவர்களைப் பொறுத்தது. நகல்வடிவிலும் முடிவாக்கப்பட்ட பின்னும் சமர்ப்பணத்தின் பிரதிகள் பங்குபற்றிய கட்சிகளுக்கு அனுப்பப்பட்டன.

அவர்கள் மூலம் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் எல்லாத் தரப்புக்களும் அந்த தீர்மானங்களை அறிந்திருப்பார்கள். அழைக்கப்பட்ட எல்லா தமிழ்க் கட்சிகளின் அன்றைய கூட்டத்தில் பங்குபற்றியது சிறப்பான அம்சம். இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மனோகணேசன் போன்றோர் தமிழர் தகவல் நடுவம் எடுத்த முயற்சிகளில் நேரடியாக பங்குபற்றவில்லை. ஆகவே அவர்களின் கருத்தாக்கம் உள்ளடக்கப்பட வேண்டும். ஆனால் தீர்மானங்களில் அவர்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதற்கு சாத்தியங்கள் மிகக் குறைவு.

ஏற்கனவே இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியவர்களுக்காக ரெலோ இரண்டு பக்க நகல் ஆவணமொன்றை கையளித்திருக்கிறது. அதன் மூன்று பந்திகளே ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்னும் ஒரு நகல் தயாரிப்பு சுமந்திரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பினரை பேச்சுவார்த்தைக்கு அழைத்து தீர்வைப்பற்றி பேசவும் அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஜனாதிபதி கோட்டாபயக்கு சம்பந்தன் பதினெட்டுப் பக்கங்களில் கடிதம் எழுதினார் என்று செய்திகள் இருந்தன. இந்தக் கூட்டத்தில் எரியும் பிரச்சினைகளாகக் காணப்பட்ட எட்டுவிடயங்களை இணைப்பாகச் சேர்ப்பதற்கு ஒத்துக் கொள்ளப்பட்டதாகவும் அறியமுடிகின்றது.

தமிழர் தகவல் நடுவம் தயாரித்த சமர்ப்பணத்தைத்தான் அனுப்ப வேண்டும் என்ற எண்ணப்பாங்கு அவர்களிடையில் இல்லை. அது ஒரு யதார்த்தமான சாசனமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் தெளிவுகளில் தமிழ் மக்கள் தமது அரசியல் தரப்புக்களை வலியுறுத்த வேண்டும். தமிழர் தகவல் நடுவம் அரசியல் அமைப்பல்ல.

ஆனால் கடந்த மனித உரிமை மன்றிற்கு ஒன்றிணைந்து ஒரு சமர்ப்பணம் தமிழ் மக்களுக்காக செய்வதாகக் கூறி அனுப்பப்பட்ட யதார்த்தமற்ற அரசியல் நோக்குகள் உள்ள ஆவணமாகாமல் இது நிதர்சனமாக வேண்டும். தமிழர் தகவல் நடுவத்தின் ஆவணத்தை முன்னெடுக்க இந்தியாவில் இருந்து இயங்கிய தரப்புக்களே ஒத்துக்கொள்ளவில்லை. அவர்களோ, தாங்கள் தயாரிக்கும் பாரிய அறிக்கையில் மகாநாடு ஒன்றின் ஊடாக தங்களது அமைப்பின் பெயரிலேயே கொடுக்க விரும்புகிறார்கள். புலம்பெயரில் இருக்கும் பல அமைப்புகள் இவற்றைச் சொல்ல வேண்டும், சொல்லக்கூடாது என கண்டிப்புக்கள் தருகிறார்களே ஒழிய சேர்ந்துதயாரிப்பதற்கு முன்வருவதில்லை. அது போலவே இப்பொழுது கூடும் அரசியல் தரப்புக்களும் தாங்களாக ஒன்றைக் கொடுக்கத் தீர்மானிக்கிறார்கள். அடையாளங்கள் அரசியலில் முக்கியமாகின்றன. விடுதலையை அர்ப்பணிப்புக்கள் முன்னெடுக்கின்றன.

கூடும் தலைவர்கள் சமர்ப்பணத்தை மாத்திரம் கையளித்து விட்டு அமர்ந்து விடாமல் தமிழர் அரசியல் ஆய்வாளர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், எடுத்துரைப்பவற்றை ஏற்றுத் தேவையான கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும். அப்படியான சர்வதேச கட்டமைப்புக்கள் உருவாகி அவை அர்த்தமுள்ளனவாக அர்ப்பணிப்புடன் இயங்காத வரையில் தமிழர் பிரதேசங்களும் தமிழர் தேசமும் தூர்ந்துவிடும். புலம் பெயர் மக்களிடையே சில அரசியல் தலைவர்கள் காலத்துக்குக் காலம் வந்து போவதால் தேசியம் வளர்ந்து விடுவதில்லை. அது கொதிநிலையில் எந்நேரமும் வைத்திருக்கப்பட வேண்டும்.





(வளரும்.....)

# எரிபொருள் விலை ஏற்றம் மலையக மக்களை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தள்ளியது

## ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் குற்றச்சாட்டு

எரிபொருள் விலையேற்றங்களால் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியாகக் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் சூழ்நிலை எழுந்துள்ளது. குறிப்பாக மலையக மக்கள் பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார். ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் -

கடந்த இரண்டு மாதத்தில் இரண்டு தடவைகள் அரசாங்கம் எரிபொருள் விலையை இரட்டை இலக்க விலைகளால் உயர்த்தியுள்ளது.

அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே நாடு இவ்வாறானதொரு நிலையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

எரிபொருள் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகள் தவறானதென கடந்த காலத்தில் ஐ.தே.க.சுட்டிக்காட்டியது. அதனைப் பொருட்படுத்தாது நடந்துகொண்டமையால்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தால் நாட்டின் அனைத்துப் பொருள்களினதும் விலைகள் பாரியளவில் அதிகரிக்கும். மரக்கறிகள் முதல் அத்தியாவசியப் பொருள்கள்வரை அனைத்தினதும் விலைகளும் ஏற்கனவே உச்சம் தொட்டுவிட்டன. இவ்வாறான பின்புலத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு மேலும் பாரிய வாழ்க்கை சுமையை மக்களுக்கு ஏற்படுத்தும்.

இந்த அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான பொருளாதாரக் கொள்கைகளைக் கைவிட்டு பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம்பெற்றவராகவுள்ள ஐ.தே.கவின் தலைவர் உட்பட அனைத்துக் கட்சியினரதும் கருத்துகளை செவிமடுத்து மக்களுக்குச் சாதகமான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

தொடர்ந்து எதேச்சதிகாரமாகச் செயற்பட்டால் எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடுமென நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

எரிபொருள் விலை தொடர்ச்சியாக அதிகரிப்பது பொருளாதார ரீதியில் பலம் குறைந்தவர்களாகவும் அன்றாட வருமானத்தை நம்பியவர்களாகவும் வாழும் மலையக மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

இவர்களது மாதச் சம்பளத்தில் இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது? உடனடியாக அனைத்துத் தோட்டங்களிலும் ஆயிரம் ரூபா நாள் சம்பளத்துக்கான உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்க வேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு - உப்போடை வாவியில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுப்பு



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்போடை வாவிப்பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று (புதன்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உப்போடையிலுள்ள பிரபல ஹோட்டலுக்கு அருகாமையிலுள்ள வாவி பகுதியிலிருந்தே இந்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் உப்போடை வாவி பகுதியில் உருக்குலைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால் அடையாளம் காணப்படாத நிலையில் காணப்படுகின்றது.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷக்கள் ஒருபோதும் தப்பியோடவே மாட்டார்கள்!

## எதிரணியினரின் குற்றச்சாட்டுக்கு சசீந்திர பதிலடி



நாட்டின் பிரச்சினைகளுக்கு அஞ்சி, ராஜபக்ஷக்கள் ஒருபோதும் தப்பியோடவேமாட்டார்கள் என்று இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் பஸில் ராஜபக்ஷ நாட்டைவிட்டுச் சென்றுள்ளார் என்று எதிரணிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக இதற்கு முன்னரும் இப்படியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. குறைகூறுவதற்கு ஒன்றுமில்லாததால் தான் எதிரணிகள் பஸில் விவகாரத்தை கையிலெடுத்துள்ளன. இது வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடு.

பஸில் ராஜபக்ஷ சிறப்பாகச் செயற்படக்கூடியவர். அவரும் மனிதர். தனிப்பட்ட தேவைகள் இருக்கலாம். அதற்காக அவர் அமெரிக்கா சென்றிருக்கலாம். மீண்டும் வருவார். தப்பியோடுபவர்கள் ராஜபக்ஷக்கள் அல்லர் - என்றார்.

## திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியிலுள்ள வீடொன்றை உடைத்து பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களைத் திருடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்த போது சந்தேக நபரும் அதனை விற்பனை செய்ய உதவிய தரகரும் யாழ். தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்த நிலையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டிலிருந்த ‘43’ தொலைக்காட்சி, சீடி பிளேயர் மற்றும் சமையல் அறை இலத்திரனியல் உபகரணங்கள் என்பன திருட்டுப் போயிருந்தன. அதுதொடர்பில் யாழ்.தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தடயவியல் விசாரணைகளை அடுத்து குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டில்ருக் தலைமையிலான அணியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

திருடப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்ட போது, அதனை விற்பனை செய்ய உதவிய தரகரும் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு வெள்ளைவத்தையைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேக நபர், திருமணம் முடித்து அச்சுவேலியில் வசித்து வருகிறார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் கடந்த 10 ஆம் திகதி அச்சுவேலியில் ஒருவரைத் தாக்கி அவர் அணிந்திருந்த மோதிரத்தைக் கொள்ளையிட்ட சம்பவத்தை சந்தேக நபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அதனடிப்படையில் அந்த மோதிரத்தை நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைத்து வழங்கிய ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர்கள் மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

## புதிதாக நியமனம் பெற்ற 17 இராஜதந்திரிகள் நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்





புதிதாக நியமனம் பெற்று இலங்கைக்கு வருகை தந்துள்ள 11 தூதுவர்களும் ஆறு உயர்ஸ்தானிகர்களும், ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

எகிப்து, இந்தோனேஷியா, ஜோர்தான், கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, ஹங்கேரியா, மொரிடானியா, தூனிசியா, ஆர்ஜென்டினா, டொமினிக் குடியரசு, ஸ்பெயின் மற்றும் ஸ்லோவேனியா ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களும் சியெரா லியோன், ருவாண்டா, பொஸ்ட்வானா, மோல்டா, கயானா குடியரசு மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளின் புதிய உயர்ஸ்தானிகர்களுமே இவ்வாறு புதிய நியமனங்களைப் பெற்றுள்ளனர்.

சியெரா லியோன் உயர்ஸ்தானிகராக எர்னஸ்ட் மைம்பா, ஜோர்தான் தூதுவராக மொஹமட் எல் - கைட், கொரியா ஜனநாயக மக்கள் குடியரசின் தூதுவராக சோய் ஹீய் சோல், ருவாண்டாவின் உயர்ஸ்தானிகராக திருமதி முகங்கிரா ஜாக்குலின், பொஸ்ட்வானாவின் உயர்ஸ்தானிகராக கில்பர்ட் ஷிமேன் மெங்கோல், மோல்டாவின் உயர்ஸ்தானிகராக ரூபன் கௌசி, ஹங்கேரியாவின் தூதுவராக அண்ட்ரெஸ் லஸ்லோ கைரலி, மொரிடானியாவின் தூதுவராக மொஹமட் அஹ்மத் ராரா, தூனிசியாவின் தூதுவராக திருமதி ஹயத் தல்பி பிலேல், ஆர்ஜென்டினாவின் தூதுவராக ஹியூகோ ஜேவியர் கோபி, கயானா குடியரசின் உயர்ஸ்தானிகராக சர்ரண்டாஸ் பெர்சாட், எகிப்தின் தூதுவராக மகெட் மொஸ்லேநபீ, டொமினிகா குடியரசின் தூதுவராக டேவிட் இம்மானுவேல் பக், நைஜீரியாவின் உயர்ஸ்தானிகராக அகமத் சுலே, இந்தோனேஷியாவின் தூதுவராக திருமதி டேவி கஸ்டினா டோபிங், ஸ்பெயினின் தூதுவராக ஜோஸ் மரியா டொமிங்குஸ், ஸ்லோவேனியாவின் தூதுவராக திருமதி மாதேஜா கோஷ் ஆகியோருடன் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர மற்றும் பிரதம ஒருங்கிணைப்பு அதிகாரி துஷார ரொட்ரிகோ ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் நடந்தது முதுகில் குத்திய சதி!



வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தவறான முடிவு காரணமாக சிங்களக் கட்சியின் வசமானது.

26 உறுப்பினர்களை உடைய வவுனியா வடக்கு பிரதேச சபையானது 2018ஆம் ஆண்டுமுதல் த.தே.கூட்டமைப்பு நிர்வாகத்தில் இருந்து வந்தது. இந்த ஆண்டு சபையின் வரவு – செலவுத் திட்டம் இரு தடவைகளும் தோற்கடிக்க முற்பட்ட சமயமே, அந்தச் சபை சிங்களப் பெரும்பான்மை வசம் செல்லும் ஆபத்து உள்ளது எனப் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டது. இருந்தபோதும் அங்கே வரவு – செலவுத் திட்டம் பொறுப்பற்ற தமிழ்த் தரப்புகளால் இரு தடவையும் தோற்கடிக்கப்பட்டது.

தவிசாளராக வேறு ஒருவர் பிரேரிக்கப்பட்டால் ஆதரவு நல்குவோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது. யாழ்ப்பாணம் மாநகர சபையிலே இ.ஆனலட்டை மாற்றாத காரணத்தினால்தான் அவரை எதிர்த்து வாக்களித்துத் தோற்கடித்தோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னர் கூறியதன் அடிப்படையில் கூட்டமைப்பு வவுனியா வடக்கு பிரதேச சபையிலே தவிசாளரை மாற்றி பிரேரித்தது. இருந்தபோதும்



அஞ்சப்பட்ட விடயமே நடந்தேறிவிட்டது.

வவுனியா வடக்கு சபை 26 உறுப்பினர் கொண்டுள்ள நிலையில் த.தே.கூட்டமைப்பு 8 ஆசனங்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் கூட்டணி தலா 3 ஆசனங்கள், பெரமுன 5 ஆசனங்கள், ஐ.தே.க. 03, சுதந்திரக் கட்சி 02, ஜே.வி.பி.01, சுயேச்சைக் குழுவிற்கு 1 ஆசனம் என்ற அடிப்படையிலேயே 26 ஆசனங்கள் அங்கு உள்ளன.

இதன் அடிப்படையில் 22 ஆம் திகதி (நேற்று) இடம்பெற்ற புதிய தவிசாளருக்கான தேர்வில் பெரமுனவைச் சேர்ந்த ஒருவரைத் தவிர ஏனைய 25 பேரும் சபைக்குச் சமுகமளித்த சமயம் வாக்கெடுப்பானது பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பிலா அமைய வேண்டும் என்பதற்கான வாக்கெடுப்பின்போது த.தே. கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், கூட்டணியின் (அதாவது சுரேஷ் அணியைச் சேர்ந்த சிவசக்தி ஆனந்தனின்) உறுப்பினர்களில் மூவரில் ஒருவர் மட்டுமே பகிரங்க வாக்கெடுப்பை கோரியபோதும் சிவசக்தி ஆனந்தனின் இருவர் உட்பட எஞ்சிய 13 பேரும் இரகசிய வாக்கெடுப்பை கோரினர். இதன் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு நடாத்த முடிவானது.

இதனால் குறித்த ஆபத்து உடனடியாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் கவனத்திற்கு கொண்டு சென்ற



போது ஜே.வி.பியுடன் தொலைபேசியில் உரையாடப்பட்டது. இதன்போது பெரமுன சுதந்திரக் கட்சி கூட்டிற்கு ஆதரவாக ஜே.வி.பியை வாக்களிக்காமல் தடுப்பதாகவும் ஆனால் இன ரீதியாக மாற அவர் மறுப்பதனால் நடுநிலைவகிப்பார் என ஜே.வி.பி. உறுதியளித்தது. ஐ.தே.கட்சியில் உள்ள மூவரில் ஒருவர் ரிஷாத் பதியுதீன் அணியைச் சேர்ந்தவர் என்பதனால் ரிஷாத் பதியுதீனிடமும் தொடர்பு கொண்டபோது அவர் பெரமுனவிற்கே வாக்களிக்கப்போகின்றார், இருப்பினும் அது கட்சி ரீதியிலான முடிவு அல்ல, அவர்கள் அவரை வளைத்து விட்டனர் என்பதனை கோடிகாட்டினார்.

இதன் அடிப்படையில் இரகசிய வாக்களிப்பின்போது சுதந்திரக்கட்சி மற்றும் த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்கள் தலா 12 வாக்குகளைப் பெற்றனர். ஒருவர் எவருக்குமே வாக்களிக்காத நிலைமை காணப்பட்டது. இரு போட்டியாளர்களும் சமவாக்குப் பெற்றதனால் திருவுளச் சீட்டு உருட்டப்பட்டபோது அது சுதந்திரக் கட்சிக்குச் சாதகமாக அமைந்தது. இதனால் வவுனியா வடக்கு பிரதேச சபை தமிழ்க் கட்சிகளின் பிடியில் இருந்து சிங்களக் கட்சிக்கு கைமாறிவிட்டது.

இந்தச் செயலிற்கு நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரனின் கூட்டுக் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியே அதிக

**- ந.லோகதயாளன் -**



பொறுப்பேற்க வேண்டும். அடுத்த பங்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் உண்டு. ஏனெனில் இரு தடவையும் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதன் மூலமே புதிய தவிசாளர் தேர்விற்கான கதவு திறக்கப்பட்டது. அதன் பிரகாரம் வரவு – செலவுத் திட்டத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் எதிர்த்தே வாக்களித்தது.

ஆக மொத்தம் ஓர் இனத்தின் இருப்பே கேள்விக்குறியாகும் ஒரு சபையின் வரவு – செலவுத் திட்டங்கள் மற்றும் புதிய தவிசாளர் தேர்வு ஆகியவற்றில் மௌனமாக இருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதயரசர் சி.வீ.விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம் மாநகர சபை வரவு – செலவுத் திட்டத்தின் போது மட்டும் விடுத்த அறிக்கை உண்மையில் பொது நலம் சார்ந்ததுதானா என எழுப்பப்பட்ட கேள்விக்கான விடையாகவும் இது அமைகின்றது.

இவ்வாறு ஓர் இனத்தின் இருப்புக்கே கேள்விக்குறியாகும் ஓர் பிரதேசத்தின் நாசச் செயலிற்கு வாக்களித்துவிட்டு, கட்சி அரசியலிற்காகவும், வெளியாரைத் திருப்திப்படுத்தி வாக்கை பெறுவதற்காகவும் அறிக்கை விடும் உண்மை முகங்கள் இதன் மூலம் தம்மைத் தாமே அம்பலமாக்கியுள்ளன.

வவுனியா வடக்கு தவிசாளர் தேர்வில் ஜே.வி.பி. உறுப்பினருக்கு இருந்த உணர்வு கூட தமிழ் தேசியம் பேசிய கட்சி ஒன்றிடம் இல்லாமல்போனமை தொடர்பில் வவுனியா மக்கள் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும்.

இதில் மிகப் பெரிய முதுகில் குத்தும் சதியும் உண்டு. வவுனியா நகர சபையிலே சிவசக்தி ஆனந்தனின் அணியைச் சேர்ந்த மூவர் மட்டுமே இருந்து கொண்டு, நகரசபைத் தலைவர் பதவியைப் பெற்றபோதும் இப்போதும் அதைத் தக்க வைத்திருக்கின்றனர். அதற்குக் காரணம் தமிழர் தரப்பை விட்டு அப்பதவி போய்விடக் கூடாது என்ற ஆதங்கத்தில் சுரேஷ்(சிவசக்தி ஆனந்தன்) அணியை எட்டு உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்க் கூட்டமைப்பு வீழ்த்த முயற்சிக்காதமையாகும். வவுனியா நகர சபையில் எங்களை எதிர்க்க வேண்டாம், ஏனைய சபையில் நாம் கூட்டமைப்பை ஆதரிப்போம் என வழங்கிய வாக்குறுதியும் சம்பந்தப்பட்ட தரப்பால் மீறப்பட்டு வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்க் கட்சி தவிசாளர் வீழ்த்தப்பட்டிருக்கின்றார். என்ன நியாயம் கற்பிக்கப் போகின்றார்கள் ‘உத்தம’ தமிழ்த் தலைவர்கள்?

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய அமைச்சரைச் சந்தித்த தி.மு.க. எம்.பிக்கள்




தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க. எம்.பிக்கள் இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்து முறையிட்டனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த டி.ஆர். பாலு, இந்திய, தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுகின்றமை, அடித்துத் துன்புறுத்தி, மீன் வளங்களை அபகரிப்பது, படகுகளைச் சேதப்படுத்துவது போன்ற செயல்களில் இலங்கைக் கடற்படை தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகிறது.

இதுவரை 68 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நாடு திரும்புவார்களா? என்ற சந்தேக நிலை உள்ளது. அதனால், அனைத்து தி.மு.க. உறுப்பினர்களும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து, அவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசை வலியுறுத்துமாறு கோரிக்கை முன்வைத்துள்ளோம். ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார், எனத் தெரிவித்தார்.




# மாவீரர் நாள் கொண்டாடியமையால் நாடுகடத்தப்பட்ட தமிழக இளைஞர்

மாவீரர் நாள் அனுஷ்டித்ததோடு விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் அட்டைப்படம் பொறிக்கப்பட்ட நாம் தமிழர் கட்சியின் அடையாள அட்டையை வைத்திருந்த நபர் சிங்கப்பூரிலிருந்து இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே எடையூர் சிவராமன் நகரைச் சேர்ந்த குமரேசன் கடந்த மூன்றரை ஆண்டுகளாக சிங்கப்பூரில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றிவருகிறார்.

இணையத்தளம் மூலம் நாம் தமிழர் கட்சியில் உறுப்பினராக இணைந்துள்ள இவர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் வைத்திருந்தார் எனவும் மாவீரர் நாளை அனுஷ்டித்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

சிங்கப்பூரில், தமிழர்கள் சிலர் மாவீரர் நாள் நிகழ்வுப் படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்தனர்.

இது தொடர்பாக சிங்கப்பூர் பொலிஸ் விசாரித்த நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் அட்டைப் படம் பொறிக்கப்பட்ட நாம் தமிழர் கட்சியின் அடையாள அட்டையை வைத்திருந்த, திருவாரூரைச் சேர்ந்த குமரேசனையும் அந்தநாட்டு பொலிஸ் விசாரித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்பதால் ஆறு நாள்களுக்கும் மேலாக விசாரணை நடத்தி, அவரை சொந்த ஊருக்கே திருப்பி அனுப்பி வைத்துள்ளனர். இனி வாழ்நாள் முழுவதும் சிங்கப்பூருக்குள் நுழைய முடியாத வகையில், அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து குமரேசனின் தந்தை செல்வமணி கூறுகையில், கடந்த மூன்றரை ஆண்டுகளாக சிங்கப்பூர் நாட்டில் தனியார் நிறுவனத்தில் என் மகன் வேலை செய்து வந்தார். நாம் தமிழர் கட்சியிலும் அவர் உறுப்பினராக உள்ளார்.

கடந்த ஒருவாரத்திற்கு முன்னர் பணியில் இருந்தபோது சீன நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் என் மகனுக்கும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து என் மகன் வேலை பார்த்த நிறுவன நிர்வாகம் செய்த முறைப்பாட்டில், அவரது வங்கிக் கணக்குகளையும் முடக்கி அவரை சிங்கப்பூர் நாட்டில் இருந்து வாழ்நாள் தடை விதித்து இந்தியாவிற்கு அனுப்ப முடிவெடுத்துள்ளனர்.

அதனால், இங்கிருந்து பணம் அனுப்பி மகனை வரவழைத்தோம். இங்கும் அவரிடம் ஒருநாள் விசாரணை நடத்தப்பட்டது. இச் சம்பவத்தால் என் மகனுக்கு மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளது. தற்போது அவர் கும்பகோணத்தில் உள்ள எங்களது உறவினர் வீட்டில் தங்கியுள்ளார், எனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட குமரேசனிடம் தொடர்பு கொண்டு ஊடகவியலாளர்கள் கேட்டபோது, நான் வைத்திருந்த கைப்பேசியில் ஈழத் தமிழர்களின் தலைவரான பிரபாகரன் மற்றும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோரின் போட்டோவை வைத்திருந்தேன். இதைக் கண்டு தடை செய்யப்பட்ட படங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட அமைப்புக்கு ஆதரவளிக்கும் அமைப்போடு தொடர்பு வைத்துள்ளீர்களா? என்று என்னிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அவர்களிடம், 'நான் நாம் தமிழர் கட்சியின் உறுப்பினர். நான் அந்த கட்சிக்கு மாத சந்தா 500 ரூபா அனுப்புவேன். அது அந்தக் கட்சி மக்களுக்காகவும் மரம் நடுதல் போன்ற பணிகளை செய்வதற்காகவும் பயன்படுத்தப்படும்' என்று தெரிவித்தேன். உடனடியாக சிங்கப்பூர் பொலிஸ் என்னை விசாரணைக்கு அழைத்துச் சென்று ஆறு நாள்கள் வைத்து விசாரணை நடத்தியது. அதன் பிறகு என்னை நாடு கடத்தியது.

இந்தியா வந்தபோது இந்தியாவில் உள்ள குடிவரவு பிரிவினரால் இரவு 7 மணி முதல் விடியற்காலை 3 மணி வரை தொடர்ந்து விசாரிக்கப்பட்டேன், என தெரிவித்தார்.




# தமிழக மீனவர்களின் கைதை கண்டித்து தங்கச்சிமடத்தில் உண்ணாவிரதப்போர்

எல்லை தாண்டி மீன் பிடித்தமைக்காக இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள 68 மீனவர்களை விடுதலை செய்யக் கோரி, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் தங்கச்சிமடத்தில் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சனி,ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய மூன்று நாள்களிலும் புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 68 மீனவர்களையும் அவர்களது 10 விசைப் படகுகளையும் இலங்கை கடற்படை எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என கைது செய்து யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறையில் அடைத்துள்ளனர்.

இதற்கு கண்டனம் தெரிவித்த இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்யக் கோரி நேற்று தங்கச்சிமடத்தில் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் எதிர்வரும் 31 ஆம் திகதி மீனவர்களை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ள நிலையில் மீனவர்களை விடுதலை செய்யாத பட்சத்தில் எதிர்வரும் முதலாம் திகதி தங்கச்சிமடத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முடிவு செய்துள்ளனர்.

நேற்று நடந்த உண்ணாவிரத போராட்டத்தில் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடிதுறைமுகத்தில் இலங்கை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எல்லை தாண்டும் தமிழக மீனவர்கள் மீது நடவடிக்கை தொடரும் எனவும், அதே நேரத்தில் சிறைபிடிக்கப்பட்ட படகுகள் அரசுடமையாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள், எல்லை தாண்டி வரும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் இலங்கை அரசை கண்டிக்கிறோம், தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கைது நடவடிக்கை தொடரும், படகுகள் அரசுடமையாக்கப்படும் என தெரிவித்ததற்கு வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை கட்சித் தலைவர் என்ற முறையில் நீங்கள்தான் தெளிவுபடுத்திக் கூறவேண்டும். அடுத்தது, போன கூட்டத்துக்கு உங்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பதை நீங்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்" என்றார் சம்பந்தன்.

ஆனால், இரண்டையுமே கூட்டத்தில் மாவை செய்யவேயில்லை என்று அறிய முடிந்தது.

நேற்று முன்தினம் கூட்டத்தில் ஒரு கட்டத்தில் சுமந்திரனுக்கும் செல்வத்துக்கும் தர்க்கம் உச்சக் கட்டத்தை அடைந்தது.

அப்போது தமிழரசுக் கட்சித் தலைவருக்கு அழைப்பு அனுப்பப்படாததமையை சுமந்திரன் கோபத்துடன் சுட்டிக்காட்டினார்.

செல்வம் குறுக்கிட்டார். "மாவை அண்ணனிடம் கேளுங்கள். தொலைபேசி மூலமும், எழுத்திலும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் இல்லை என்றால் மறுக்கட்டும்" என்றார் செல்வம்.

மாவையர் பம்ம, சுமந்திரன் வாயடைத்துப் போனார். அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

அது போலவே, தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு இதுதான் என்று காத்திரமான பேச்சு எதையுமே அங்கு மாவை முன்வைக்கவே இல்லை.

அழைப்பு விடயத்தில் மாவையின் நடத்தைக்கு இரண்டு காரணங்களில் ஒன்று பின்னணியாக இருக்கலாம்.

ஒன்று - அவரது வழமையான அரசியல் பம்பாத்துப் போக்கு.

இரண்டாவது - முதலாவது காரணமில்லாவிட்டால், வயது மூப்பினால் அவருக்கு ஏற்பட்ட மறதி.

இந்த இரண்டில் எது என்றாலும், அது அவருக்கு ஒரு செய்தியைத்தெளிவாகச் சொல்கிறது என நான் நினைக்கிறேன். இரண்டு முறை - ஏறத்தாழ ஏழெட்டு வருடங்கள் - தான் வகித்த தமிழரசுத் தலைமைப் பதவியைப் பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டிய வேளை கதவைத் தட்டுகின்றது என்பதுதான் அது. அவருக்கான 'கௌவரமான' வெளியேற்றத்துக்கு வழி பாரப்பது தமிழரசின் வேலை.

தமிழரசு இறக்கக் கூடிய அந்தப் பாரத்தை இனிமேல் கூட்டமைப்பு சுமக்க வேண்டி இருக்கும் என்பதுதான் தமிழர் தரப்பின் துரதிர்ஷ்டம்.

✦✦✦

அமுல்பேபியின் அராஜகம் தொடர்வது பற்றிய விவரத்தை நாளை பார்ப்போம் வாசக நண்பர்களே!

**- மின்னல்-**

## மோடியிடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேற்று வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புதிய வரைவு தயாரிக்கப்பட்டபோது அதன் நோக்கம், பொருள் என்பன மாற்றப்பட்டே புதிய ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆவணமும் தற்போது ஒரு வரைவாகவே இருக்கின்றது.

இந்த வரைவை அல்லது இதன் திருத்தத்தை கட்சிகள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே இது கைச்சாத்திடப்படும்.

சில ஊடகங்கள் தொடர்ந்தும் தவறான தலைப்பில் இது சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதால் இந்த முக்கிய ஊடக அறிக்கை வெளியிடப்படுகின்றது - என்றுள்ளது.

## அரசியல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தில் தமிழ்பேசும் கட்சிகளுக்கிடையில் - அதன் தலைவர்களுக்கிடையில் நான் பெரிது, நீ பெரிது என்ற வேறுபாடு இருக்கக்கூடாது. யார் தலைமை என்ற கேள்வியும் இருக்கக்கூடாது.

தமிழ்பேசும் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்க வேண்டும்.

தமிழ்பேசும் கட்சிகளின் தலைவர்களின் கையொப்பங்களுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்படவுள்ள ஆவணம் மிகவும் காத்திரமானதாக இருக்கும் என நம்புகின்றேன்.

தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் என ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில் புதிய ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது. இது இன்னமும் இறுதி செய்யப்படவில்லை.

அனைத்துத் தமிழ்பேசும் கட்சிகளின் இணக்கத்துடன் அதன் தலைவர்கள், இறுதிப்படுத்தும் ஆவணத்தில் ஒப்பங்களைக் கைச்சாத்திட்ட பின்னர் அதை இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைக்க கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்பேசும் கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூலம் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன உள்ளிட்ட ஆணையாளர்கள் நீதிமன்றத்தை அவமதித்துள்ளனர் என்று தீர்மானித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குமாறு ஷானி அபேசேகர தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரிய ஊடாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஏனைய பிரதிவாதிகளாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களான தயா சந்திரசிறி ஜயதிலக்க மற்றும் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவன்ட்கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையின் தலைவர் நிஸங்க சேனாதிபதி முன்வைத்த முறைப்பாடு தொடர்பில் சாட்சியமளிப்பதற்காக அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்த ஆணைக்குழு தமக்கு விடுத்த அழைப்பை ஆட்சேபித்து ஷானி அபேசேகர மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுத் தாக்கல் செய்தாக நேற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்தாணை மனு மீதான விசாரணையின்போது ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி, மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை, நிஸங்க சேனாதிபதியின் முறைப்பாடு தொடர்பில், தனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாது என மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்ததாக ஷானி அபேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு நீதிமன்றத்தில் வாக்குறுதியளித்திருந்த நிலையில், பிரதிவாதிகள் பரிந்துரைகளை முன்வைத்ததன் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை மீறியுள்ளனர் என்று அவரது மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் நீதிமன்ற அவதூறு செய்துள்ளனர் எனத் தீர்மானித்து, அரசமைப்பின் 105 - 3ஆம் சரத்துக்கமைய அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவதூறு வழக்கைப் பதிவு செய்து விசாரணை நடத்துமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

வழக்கு விசாரணையின்போது பிரதிவாதிகளைக் குற்றவாளிகளாகத் தீர்மானித்து தண்டனை வழங்குமாறும் ஷானி அபேசேகர தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பொருள்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாப் பெருந்தொற்று நிலைமை முழுமையாகக் கட்டுக்குள் வரும்வரை, இந்நிலைமைக்கு நாம் முகங்கொடுத்தாக வேண்டும்.

உணவுப் பொருள்களின் விலைகள் மற்றும் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதை நாமும் விரும்பவில்லை.

அனைவருக்கும் இதனால் பாதிப்பு. விருப்பம் இல்லாவிட்டால்கூட அதிகரிப்பைச் செய்தாக வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது - என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்கள் வாங்கவே மாட்டோம்

## மத்திய வங்கி ஆளுநர் திட்டவட்டம்



எவர் எத்தகைய யோசனைகளை முன்வைத்தாலும் அரசு கடன் பெற்றுக்கொள்வதற்காகச் சர்வதேச நாணய நிதியத்தை நாடப்போவதில்லை என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கடன் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது மிக ஆபத்தானது எனத் தெரிவித்துள்ள அவர், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லாமல் உள்நாட்டிலேயே முகாமைத்துவம் செய்துகொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும்தெரிவிக்கையில்,

நிபந்தனைகளுக்கு அடிபணிந்து சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொள்வது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் நாட்டுக்கு முதலீடுகளோ சுற்றுலாப் பயணிகள் வருகையோ இடம் பெறாமல் விடலாம்.

அவ்வாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்றுக்கொள்வதற்குச் சென்றால் அவர்கள் கண்டிப்பாக வட்டி வீதத்தை அதிகரிப்பதாகவும் நாணயத்தின் பெறுமதியை குறைக்க இடமளிக்குமாறும் நாட்டின் வளங்களை விற்பனை செய்யுமாறும் ஓய்வூதியக் கொடுப்பனவை குறைக்குமாறும் கூற வாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டி வரும். நாட்டின் நெருக்கடி நிலைமையைச் சிறந்த முகாமைத்துவம் மூலம் தீர்க்க முடியும் - என்றார்.

# கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சிறுவனுக்குக் கொரோனாத் தொற்று

(வவுனியா நிருபர்)
வவுனியா, கொக்குவெளிப் பகுதியில் கிணற்றில் நீராடச் சென்று உயிரிழந்த சிறுவனுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா, கொக்குவெளிப் பகுதியில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் அருகில் உள்ள கிணற்றில் குளிக்கச் சென்ற நிலையில் கிணற்று நீரினுள் மூழ்கி உயிரிழந்தார்.

இந்நிலையில், கிராம மக்களின் முயற்சியால் கிணற்றுநீர் வெளியில் இறைக்கப்பட்டு நேற்றிரவு 11.30 மணியளவில் குறித்த சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அவரது சடலத்தைச் சுகாதார நடைமுறைகளைப் பேணி எரியூட்டுவதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

(100)

## பஸ் கட்டணமும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களுடன் நேற்று நடத்திய சந்திப்பின் பின்பே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் பஸ் கட்டணமும் அதிகரிக்குமா என எல்லோரும் கேட்கின்றனர். இதற்கு ஆம் என்பதே பதில். கட்டண உயர்வைத் தடுக்க முடியாது. பஸ் உரிமையாளர்கள் மற்றும் பயணிகளின் கருத்துகளை உள்வாங்கி தொகை நிர்ணயிக்கப்படும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நான்கு நாள்கள் அவகாசம் கோரியுள்ளது. அதன்பின்னர் முடிவெடுக்கப்படும் - என்றார்.

## இரு அமைச்சுக்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயலாளராக அனு பெல்பிட்ட நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் விவசாய அமைச்சின் செயலாளராக டி.எம்.எல்.டி.பண்டாரநாயக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்த நியமனம் அமுலுக்கு வரும் என ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## மேலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 811 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 16 மரணங்களில் 8 பெண்களும், 8 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொழும்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவால் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் அதிகம் நடமாடும் இடங்கள் மற்றும் பிரதேசங்களை அண்மித்து விசேட வாகனத் திட்டத்தை அமுல்படுத்துமாறும், குற்றவாளிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு சிவில் உடையில் பணியில் ஈடுபடும் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இணுவிலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மணியளவில் திடீரென மூச்சடங்கிக் காணப்பட்டது.

உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் குழந்தை உயிரிழந்துள்ளது என மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

# எல்.பி.எல். 2021 இறுதிப்போட்டியில் கோல் க்ளடியேட்டர்ஸ் அணியுடன் ஜப்னா கிங்ஸ் அணி மோதவுள்ளது



லங்கா பிறீமியர் லீக் தொடரின் இந்த வருடத்துக்கான தொடரின் இறுதிப் போட்டியில், கோல் க்ளாடியேட்டர்ஸ் அணியுடன் ஜப்னா கிங்ஸ் அணி மோதவுள்ளது. முதலாவது லங்கா பிறீமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டியிலும் இந்த இரு அணிகளுமே ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தமையும் அந்தப் போட்டியில் வென்றிருந்த ஜப்னா அணி சம்பியனானமையும் குறிப்பிடத்தக்கது. அப்போது ஜப்னா ஸ்டாலியன்ஸ் என்ற பெயரோடு விளையாடியிருந்த ஜப்னா அணி, தற்போது அணி முகாமைத்துவமும் பெயரும் மாற்றப்பட்ட நிலையில் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

தம்புள்ள ஜயண்ட்ஸ் அணியுடன் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இறுதிப்போட்டிக்கான இரண்டாவது தகுதி காண் போட்டியில், 23 ஓட்டங்களால் வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்னா கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைக் குவித்தது. அவிஸ்க பெர்னான்டோ 100 ஓட்டங்களையும், ரஹ்மதுல்லா குர்பாஸ் 70 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதையடுத்து, பதிலளித்தாடிய தம்புள்ள ஜயண்ட்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்று 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சம்மிக கருணாரத்ன ஆட்டமிழக்காது 75 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஜப்னா கிங்ஸ் அணியின் ஜெய்டன் சீல்ஸ் 3 விக்கெட்டுக்களையும். மகேஸ் தீக்ஷன, திசர பெரேரா இருவரும் தலா இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக அவிஸ்க பெர்னான்டோ தெரிவானார்.

இந்த வருடத்துக்கான எல்.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி இன்று 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## ஆசிய சம்பியன்ஸ் ஹொக்கிப் போட்டித் தொடர்

# இந்தியாவை வீழ்த்தி இறுதியில் ஜப்பான்




ஆறாவது ஆசிய சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கித் தொடர், பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடந்து வருகிறது. இதில் லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடித்த இந்தியா, தென்கொரியா, பாகிஸ்தான் மற்றும் ஜப்பான் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

இந்த நிலையில், நேற்று மாலை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான இந்திய அணி, ஜப்பானை எதிர்கொண்டது. ஆரம்பம் முதல் ஜப்பான் அணி சிறப்பாக ஆடியது. இதனால் முதல் பாதி முடிவில் ஜப்பான் 3-1 என முன்னிலை வகித்தது. இறுதியில், இந்திய அணியை 5-3 என்னும் கோல் கணக்கில் வீழ்த்திய ஜப்பான் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை எதிர்த்து விளையாடவுள்ளது.

# ஜொப்ரா ஆர்ச்சருக்கு மீண்டும் முழங்கையில் சத்திரசிகிச்சை

முழங்கையில் ஏற்பட்ட காயத்துக்கு மீண்டும் சத்திர சிகிச்சை மேற்கொண்டதன் காரணமாக இங்கிலாந்து அணியின் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்திலும் வேகப்பந்து வீச்சாளர் ஜொப்ரா ஆர்ச்சர் இடம்பெறமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத் தொடக்கத்தில் இந்தியாவில் அந்த அணிக்கு எதிரான போட்டிகளில் விளையாடிய ஆர்ச்சர், வலது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நாடு திரும்பினார்.

பின்னர், ஐ.பி.எல்.போட்டிகளிருந்தும் விலகியிருந்த ஆர்ச்சர், காயத்திலிருந்து மீண்டு சஸெக்ஸ் பிராந்திய அணிக்காக விளையாடியிருந்தார். அவரது முழங்கைக் காயத்தில் மீண்டும் வலி ஏற்பட்டதால் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்தும் விலகியிருந்த அவருக்கு, கடந்த மே மாதம் முழங்கைக் காயத்துக்காக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும், அவரது காரணம் பூரண குணமடையாது மீண்டும் உபாதை ஏற்பட்டதால் கடந்த 11 ஆம் திகதி லண்டனில் அவரது முழங்கையில் மீண்டுமொரு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது ஓய்விலிருக்கும் அவரது காயம் பூரணமாகக் குணமடையும் காலத்தை உடனடியாகத் தீர்மானிக்க முடியாது எனத் தெரிவித்துள்ள இங்கிலாந்து கிரிக்கெட் சபை, அவருக்கு தேவையான ஓய்வை வழங்கியுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் ஆஷஷ் தொடரில் முதலிரு போட்டிகளிலும் தோல்வியடைந்த நிலையில் தடுமாறிவரும் இங்கிலாந்து அணிக்கு, ஆர்ச்சரின் இழப்பும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# புரோ கபடி லீக் தொடர் பெங்களூரில் ஆரம்பம்

இந்தியாவில் நடைபெறும் புரோ கபடி ‘லீக்’ போட்டித்தொடர் 2014 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது முதல் இதுவரை 7 போட்டித்தொடர்கள் நடைபெற்றுள்ளன. 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில் பெங்கால் வரியர்ஸ் அணி சம்பியன் பட்டம் பெற்றது. கொரோனாப் பரவல் காரணமாக கடந்த ஆண்டு இந்தத் தொடர் நடைபெறவில்லை. இந்த நிலையில் எட்டாவது புரோ கபடி லீக் போட்டித் தொடர் பெங்களூரில் உள்ள ரொட்டன் கிராண்ட் வைட் பீல்ட் வளாகத்தில் நேற்று ஆரம்பமாகியது.

இந்தப் போட்டித்தொடரில் 3 முறை சம்பியனான பாட்னா பைரேட்ஸ், ஒரு முறை கோப்பையை வென்ற ஜெய்பூர் பிங்க் பாந்தர்ஸ், யு மும்பை, பெங்களூர் புல்ஸ், பெங்கால் வரியர்ஸ் மற்றும் தமிழ் தலைவாஸ், தபாங் டெல்லி, புனேரி பல்தான், தெலுங்கு டைட்டன்ஸ், குஜராத் ஜெய்ன்ட்ஸ், உ.பி.யோதா, அரியானா ஸ்டீலர்ஸ் ஆகிய 12 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா இரு முறை மோதவேண்டும். லீக் முடிவில் முதல் 6 இடங்களைப் பிடிக்கும் அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெறும். அந்தச் சுற்றில் முதலிரு இடங்களையும் பிடிக்கும் அணிகள் நேரடியாக அரை இறுதிக்கு முன்னேறும். எஞ்சிய 4 அணிகள் வெளியேற்றுதல் சுற்றில் மோதி, அங்கு வெற்றி பெறும் இரு அணிகள் அரையிறுதி வாய்ப்பைப் பெறும்.

நேற்றைய ஆரம்ப நாளில் 3 ஆட்டங்கள் நடைபெற்றன. இரவு 7.30 க்கு ஆரம்பமாகும் முதல் போட்டியில் பெங்களூர் புல்ஸ் – மும்பை அணிகள் மோதுகின்றன.

### கொழும்பு பல்கலை பட்டமளிப்பு விழா;

# வேந்தரான தேரரைப் புறக்கணித்த மாணவர்களுக்கு சந்திரிகா பாராட்டு

கொழும்பு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள முருத்தெட்டுவே ஆனந்த தேரரிடம் பட்டத்தைப் பெறாது சென்ற மாண வர்களை வாழ்த்துகின்றேன்.

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு பல் கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கொழும்பு பல் கலைக்கழகத்தின் வேந்தராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பௌத்த தேரரை மாணவர்கள் அவம தித்தமை தொடர்பில் தனது முகப்புத்தகத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரு ஜனநாயக நாட்டில் அரசுக்கு எதிராக அல்லது அரசின் தீர்மானத்துக்கு எதிராக அந்த நாட்டில் வாழும் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட உரிமை உண்டு

அதைத்தான் கொழும்பு பல்கலைக்கழக மாணவர் கள் செய்துள்ளார்கள். குறிப்பாக கொழும்பு பல் கலைக்கழகத்தின் வேந்தராக ஒரு பௌத்த துறவி நியமிக்கப்பட்டுள்ளார்.

அது மக்களின் விருப்பமாகவோ அல்லது அரசின் விருப்பமாகவோ அல்லது அரசின் பங்காளிக் கட்சிகளின் விருப்பமாகவோ அல்லது ஒருகட்ட சமூகத்திடமும் ஆலோசனை பெறாது இடம்பெற்றுள்ளது.

அது தனித்துவமான தீர்மானமாக இடம்பெற்றது. எனினும், பலரும் அதற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டிருந் தார்கள்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் அதனைச் செயற்பாட்டில் காட்டியிருக்கின்றார்கள். ஒரு ஜனநாயக நாட்டில் ஓர் அரசுக்கு எதிராக எதிர்ப்பை வெளியிடுவதற் குப் பூரண சுதந்திரம் உண்டு.

எனினும், அந்த எதிர்ப்பை அவர்கள் வன்முறை யாகவோ அல்லது குண்டுகளை வெடித்தோ அல்லது போராட்டங்களைச் செய்தோ அல்லது இடத்துக்கு இடம் கலவரங்களை ஏற்படுத்தியும் செய்யாது தமது பட்டமளிப்பு விழாவில் அவரை நிராகரித்து இருக்கின் றார்கள்.

அது ஒரு முன்னுதாரணமாகும். வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள அந்தத் தேரரிடம் பட்டத்தைப் பெறாது சென்ற மாணவர்களை வாழ்த்துகின்றேன்.

அவர்கள் எதிர்ப்பைக் காட்டிய விதத்தை நான் மதிக் கின்றேன். அவர் களுக்கு எனது நன்றியைத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

ஓர் அரசின் ஜனநாயகமற்ற செயற்பாட்டுக்கு அந்த மாணவர்கள் தமது பதிலடியை ஜனநாயக ரீதியில் வழங்கியுள்ளார்கள்.

நாட்டின் சிரேஷ்ட தலைவர் என்ற ரீதியில் அந்தச் சம்பவம் தொடர்பில் நான் கருத்து ஒன்றைப் பதிவிட விரும்பியே இந்தப் பதிவை வெளியிட்டுள்ளேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

## இரு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்!

இரண்டு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக அனுஷ பெல்பிட்ட நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் விவசாய அமைச்சின் செயலாளராக டி. எம்.எல்.டி.பண்டாரநாயக்க ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டுள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்த நியமனம் அமுலுக்கு வரும் என ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## இளம் பெண் ஒருவர் மாரவில்லவில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை!

கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலில் பாய்ந்து இளம் பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - சிலாபம் ரயில் பாதையில் புஞ்சி பாலத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மாதம்பே பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய யுவதி என அடையாளம் காணப்பட்டுள் ளார்.

சடலம் மாதம்பே வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது. பிரேத பரிசோதனை நடைபெறவுள்ளதுடன், மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் தஞ்சமடைந்த ஊடகவியலாளர்

ஊடகவியலாளருக்கு விடுக்கப்பட்ட தொடர்ச்சியான கொலை அச்சுறுத்தல் காரணமாக அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

தொடர்ச்சியாக குறித்த ஊடகவியலாளரை இலக்கு வைத்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் அச்சுறுத்தல் விடுத்து வருகிறார் எனப் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார்.




அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி தொலைக்காட்சி ஒன்றின் பிராந்திய ஊடகவியலாள ராகக் கடந்த பல வருடங்களாகச் செயற்பட்டு வரும் சஹீர் அஹமட் பாறுக் (வயது - 29) மீது அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உயர் அதிகாரியால் கொலை அச் சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது பிரத்தி யேக வேலை ஒன்றுக்காக அக்கரைப்பற்று பிரதான வீதியில் இருக்கின்ற முஸ்லிம் மையவாடிக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் இரவு 8.35 மணிக்கு பயணம் செய்த வேளை ஈபிகேஎவ் 0842 இலக்கமுடைய காரில் வந்த குறித்த உயரதிகாரி தனது (ஊடகவியலாளர்) மோட்டார் சைக்கிளை நிறுத்தி அச்சுறுத்தலை தனக்கு விடுத்துள்ளார் என ஊடகங்களிடம் பேசும் போது அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மேலும் கருத்துத் தெரிவித்த ஊடகவிய லாளர், மோட்டார் சைக்கிளை அந்த இடத்தில் நிறுத் திய பின்னர் சிவிலுடையில் குறித்த அதிகாரி என்னை நோக்கி வருவதை அவதானித்தேன். அதன் பின்னர் என்னை நோக்கி அவர் கடும் கோபத்தில் இவ்வாறு சொன்னார்.

'எனக்கு எதிராக உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற் றும் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் உள்ள முறைப்பாடுகளை மீளப்பெறல் வேண்டும் அத்துடன் மனித உரிமை மீறலில் வழக்கு விசாரணையை வாபஸ்பெற வேண்டும் அப்படி இல்லாவிட்டால் உன்னை இந்த மையவாடிக்கு வெகுவிரைவில் புதைப்போம். நீ யாருடன் மோதுகிறாய் என்று உனக்குத் தெரியாதா... வருகின்ற வாரத்துக்குள் மனித உரிமை மீறல் வழக்கு விசாரணையில் இருந்து என்னை விடுவிக்க வேண் டும் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் இடம் பிடிப் பாய் இல்லாது விட்டால் உயிருடன் புதைக்கப்படுவாய் என்று அச்சுறுத்தி விட்டு சென்றார் எனக் குறிப்பிட்டார்.

மேலும் குறித்த உயர் பொலிஸ் அதிகாரி கடந்த 02.09.2021 அன்று ஊடக கடமைக்குச் சென்ற வேளை என்னை பொலிஸ் குழு ஒன்றுடன் இணைந்து தாக்கி காயப்படுத்தியதுடன் கமராவையும் உடைத்துள் ளதை என்னிடம் உள்ள வீடியோ ஆதாரத்தில் குறிப் பிட்டுள்ளேன். எனவே, இது தொடர்பாக எனக்கு நீதி ஒன்றை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பெற்றுத் தர வேண்டும். எனக்கு திருமணம் ஆகி 6 வயது மற் றும் ஒரு வயது குழந்தைகள் உள்ளன எனத் தெரி வித்தார்.

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்
74 ஆவது இதழ்
செம்மணி
வெளிவந்துவிட்டது
வாசித்துவிட்டீர்களா?

- ஜோ பைடனுக்குப் பொறுப்பக்கள் அதிகம்
- அடுத்த முதலமைச்சர் தெரிவு மணிவண்ணனா?
- எனது வானூர்திக்குச் சுட்டுக் காலைக் காயப்படுத்திய புலிகள்
- நச்சரிப்புக் காதல் இல்லை
- சிவசின்னங்களில் ஒன்றாகிவிட்டதா ஒலிபெருக்கி...?
மேலும் பல சுவையான அம்சங்களுடன்
உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள் 076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2021 இல் வெளியிடப்பெற்றது.